ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1792/19 - 2013 ජනවාරි මස 09 වැනි බදාදා - 2013.01.09

*1792/19 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்**

*2 (1) (ஆ) (i) மற்றும் (ii) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கைச் சனநாய சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவில் (ஆ) பந்தியில் (i) ஆம் (ii) ஆம் உப பந்திகளினூடாக எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் கீழ் குறிப்பிடுவதனைப் போன்று தீர்மானிக்கப்படுவதாவது:*

1. *மேற்குறித்த சட்டத்தின் 2 ஆம் உப பிரிவின் (1) ஆம் பிரிவின் (ஆ) பந்தியில் (ii) ஆவது உப பந்தியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் “அனுமதிக்கப்பட்ட மோட்டார் வாகனம்” என்ற பிரிவில் அமைக்கப்பட்டிருக்கும் மோட்டார் வாகனமானது மோட்டார் காராக இருத்தல் வேண்டும் என்பதுடன் ;*

2. *அறவீடு செய்யப்படும் மோட்டார் வாகன சலுகை அறவீடானது சுங்க கட்டளைச் சட்டம் (235 ஆவது அத்தியாயம்), 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் என்பனவற்றுக்கு அமைய, குறித்த நபரினால் செலுத்தப்பட வேண்டியிருக்கும் மொத்த வரித் தொகையின் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதத்திற்கு கணிப்பீடு செய்யப்படுகின்றதொரு தொகையாகும்.*

*இக்கட்டளையில் “மோட்டார் வாகன சலுகை அறவீடு” என்பது 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவில் (ஆ) பந்தியில் (i) ஆம் (ii) ஆம் உப பந்திகளினூடாக விதிக்கப்பட்ட வரி எனப் பொருள்படும்.*

*2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (ஆ) பந்தியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2011, யூன் மாதம் 07 ஆந் திகதிய 1709/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*கொழும்பு,*
*2013, சனவரி 09.*

*01- 690*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*